2005 மார்ச் 29]

ஆகையினால், எங்களுடைய தூத்துக்குடி மாவட்டத்தினுடைய தலைமை இடமாகிய தூத்துக்குடியிலாவது—இந்தப் பட்டயப் பயிற்சிப் பள்ளி துவங்கும் காலகட்டத்திலே, போக்குவரத்து வசதிக்கு அதிகமான வாய்ப்புகள் உள்ள தூத்துக்குடி நகரிலாவது—இந்தப் பட்டயப் பயிற்சிப் பள்ளியைத் துவங்குவதற்கு, வரும் நிதியாண்டிலாவது மாண்புமிகு அம்மாவின் அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்திலிருந்து தற்போது பட்டயப் பயிற்சி பெறுகின்ற மாணவ, மாணவியர்களுடைய எண்ணிக்கை மொத்தம் 37 பேர்களாகத்தான் உள்ளார்கள். இவர்களுடைய எண்ணிக்கை அதிகமாகின்றபொழுது, தேவைக்கேற்ப மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மாவினுடைய அரசு பரிசீலிக்கும் என்கின்ற கருத்தினைச் சொல்லி, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 234, திரு. அ.இரா. மலையப்பசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

234—

பாதை வசதி

***48630—திரு. அ.இரா. மலையப்பசாமி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலையிலுள்ள புகழ்பெற்ற அருள்மிகு முருகன் கோயிலின் மலை உச்சியில் அமைந்திருக்கும் விநாயகர் கோயிலுக்குச் செல்ல பாதை வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கபிலர்மலையில் அமைந்துள்ள முருகன் சன்னதிக்குச் செல்வதற்கும், சுவாமி தரிசனம் முடித்து மலையிலிருந்து இறங்கவும், தனித்தனியே படிக்கட்டு வசதிகள் உள்ளன. இம்மலை உச்சியிலுள்ள சிறிய விநாயகர் சன்னதிக்குச் செல்வதற்குப் படிக்கட்டு வசதிகள் உள்ளன. அவை நல்ல நிலையில் உள்ளன. எனவே, மீண்டும் விநாயகர் சன்னதிக்குச் செல்ல

பாதை அமைக்க அவசியம் இல்லை என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை. திரு. சாமி.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலேதான் எல்லாக் கோயில் தலங்களுக்கும் வழிபடச் செல்வதற்கு நல்ல முறையிலே தரமான தார்ச் சாலைகள் இன்றைக்கு அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இரு வழிகள் இருப்பதால் பாதை அமைக்கத் தேவையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். எங்களுடைய மேலூர் தொகுதியில், அழகர்கோயிலிலே மேலே தீர்த்தத் தொட்டி இருக்கின்றது. இந்தியா முழுவதிலுமிருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகள் எல்லாம் ஒரே வழிச் சாலையில்தான் மேலே செல்ல வேண்டியிருக்கிறது. ஒரு வழிச் சாலையாக இருப்பதால் மிகவும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது. அந்தக் கோயிலிலே அதிக நிதியும் இருக்கின்றது. ஆகையால் அம்மாவினுடைய அரசு, கோயில்களுக்குப் புதிய, புதிய திட்டங்களை—தற்போது பழனியில்கூட சில மாதங்களுக்கு முன்பாக rope car வசதியைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்து கொடுத்தார்கள்; இன்னும் பல்வேறு கோயில்களுக்கு rope car விடுவதாக அறிவித்திருந்தார்கள். அந்த அடிப்படையிலே, மாண்புமிகு அமைச்சரைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அழகர்கோயிலிலிருந்து மேலே தீர்த்தத் தொட்டி செல்வதற்கு, இறங்குவதற்குப் புதிதாக ஒரு வழியை அமைத்துத் தரவோ, இல்லை என்றால் பழனி ஆண்டவர் கோயிலிலே rope car வசதியை அமைத்ததுபோல, கீழே அழகர்மலையிலிருந்து மேலே தீர்த்தத் தொட்டிக்குச் செல்வதற்கு ஒரு rope car வசதி அமைத்துக் கொடுக்கவோ அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதிக்குப் பதில் சொன்னோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற கோரிக்கையின் அடிப்படையில் அங்கே மலைப் பாதையில் சாலை அமைக்கக்கூடிய வாய்ப்புகள் இருக்குமேயானால், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவிடத்திலே அனுமதி பெற்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

2005 மார்ச் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 235, திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

235—

குடமுழுக்கு

***69490—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதி, வரலாற்றுச் சிறப்புமிகுந்த கல்குளம் திருநயினார் நீலகண்டசுவாமி திருக்கோயில் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளதைப் புதுப்பித்து, குடமுழுக்கு நடத்திடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பத்மநாபபுரம் தொகுதியில் வரலாற்றுச் சிறப்புமிக்க கல்குளம் திருநயினார் நீலகண்டசுவாமி திருக்கோயிலைப் புதுப்பித்து, குடமுழுக்கு நடத்திடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பத்மநாபபுரம் அரண்மனைக் கோட்டைக்குள் இருந்துவரும் வரலாற்றுச் சிறப்புமிக்க கல்குளம் திருநயினார் நீலகண்டசுவாமி திருக்கோயில் சுமார் 350 வருடங்களுக்கு முன்பாக சுசீந்திரம் தாணுமாலய சுவாமி திருக்கோயில் மாதிரி வடிவத்தில் அமைக்கப்பட்டதாகும். 2 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இக்கோயில், சிவபுராண வரலாறு தொடர்புடைய 12 சிவாலயங்களில் சிறப்புமிக்க 7–வது கோயிலாகும். திருவட்டாறு, ஆதிகேசவப் பெருமாள் கோயிலுக்கு உட்பட்ட கல்குளம் தாலுகாவிலிருந்துவரும் அனைத்துக் கோயில்களிடம் உள்ள தங்கம், வைரம் போன்ற கோடிக்கணக்கான விலை மதிப்புள்ள ஆபரணங்கள் இந்தக் கோயிலில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மிகப் பழமையான இந்தக் கோயில் கோபுரங்களில் அமைக்கப்பட்டுள்ள சிற்பங்கள் ஒவ்வொன்றாக இடிந்து கீழே விழுந்து